NNEDV

Facebook இல்

# தனியுரிமை & பாதுகாப்பு

முறைகேட்டிலிருந்து மீண்டவர்களுக்கான வழிகாட்டி

# பொருளடக்கம்


அறிமுகம் 1

பாதுகாப்புக்கான முதல் அரண்: உங்கள் உள்ளடக்கத்தை யார் பார்க்கலாம் என்பதை நிர்வகித்தல் 2

கட்டுப்பாட்டைத் திரும்பப்பெறுதல்: உங்கள் தனியுரிமை அமைப்புகளை மதிப்பாய்வு செய்தல் 3

பாதுகாப்புக்கான இரண்டாவது அரண்: பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் அறிவிப்புகள் 4

பாதுகாப்புக்கான மூன்றாவது அரண்: பாதுகாப்பாக இருத்தல் 5-6




# குடும்பங்கள், நண்பர்கள், சமூகங்கள் ஆகியவற்றுடன் தங்கள் வாழ்க்கையின் மிக முக்கிய பகுதிகளைப் பகிர அனுமதிக்கும் மிகவும் வெளிப்படையான, இணைக்கப்பட்ட உலகை சமூக ஊடகம் உருவாக்குகிறது.



உள்நாட்டு வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தேசிய அமைப்பு (NNEDV) மற்றும் Facebook ஆகியவை இணைந்து, முறைகேட்டால் பாதிப்புக்குள்ளானவர்களுக்குக் குறிப்புகளை வழங்குகின்றன, அதன்மூலம் உங்கள் தகவல் மீதான பாதுகாப்பை நிர்வகித்து, கட்டுப்பாட்டுடன், தொடர்ந்து Facebook ஐப் பயன்படுத்தலாம். முறைகேட்டில் ஈடுபடுபவர்கள், பின்தொடர்பவர்கள், குற்றவாளிகள் போன்றோர் பின்தொடர்வது, தொல்லை தருவது ஆகியவற்றிலிருந்து தடுக்க உதவும் அவர்களுடைய பாதுகாப்பு மற்றும் தனியுரிமை போன்றவற்றின் கட்டுப்பாட்டுடன், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்ந்து இணைந்திருக்கும் விதத்தில் Facebook ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றி உள்நாட்டு வன்முறை, பாலியல் பலாத்காரம், பின்தொடர்தல் போன்றவற்றிலிருந்து மீண்டவர்களுக்கு உதவும் குறிக்கோளை இந்த வழிகாட்டி கொண்டுள்ளது.

## நினைவில் கொள்ளவும்:

நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டவராக இருந்து, உதவி தேவைப்பட்டால், பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும்/அல்லது மனித உரிமைகள் சார்ந்த ஓர் அமைப்பைத் தொடர்புகொள்ளவும்.

NNEDV என்பது உள்நாட்டு வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் முன்னணி அமைப்பாகும், மேலும் அதன் வழக்கறிஞர்கள் உள்நாட்டு வன்முறையின் சிக்கலான காரணங்கள் மற்றும் பல்வேறு வகையான விளைவுகளை தீர்க்கும் பலதரப்பட்ட திட்டங்களை வழங்குவதுடன், முயற்சிக்கவும் செய்கின்றனர். மேலும் தகவலுக்கு, nnedv.org ஐப் பார்வையிடவும்.

# பாதுகாப்புக்கான முதல் அரண்: உங்கள் உள்ளடக்கத்தை யார் பார்க்கலாம் என்பதை நிர்வகித்தல்



பொதுவாக, நீங்கள் சேர்க்கும் ஒவ்வொரு நண்பரும் நீங்கள் என்ன இடுகையிடுகிறீர்கள் என்பதைப் பார்க்கக்கூடும் மற்றும் உங்கள் தனியுரிமை அமைப்புகளைப் பொறுத்து, உங்கள் நண்பர்களின் நண்பர்களும் நீங்கள் என்ன இடுகையிடுகிறீர்கள் என்பதைப் பார்க்கக்கூடும். பாதிப்பிலிருந்து மீண்ட சிலருக்கு, அவர்களுக்குத் தீங்கு செய்தவர்களுடைய நட்பை மறுப்பதும் அல்லது அவர்களைத் தடுப்பதும் கூட முடியாததாக இருக்கக்கூடும், மேலும் தீங்கு செய்தவர் மூலம் அபாயம் மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய நடத்தை அதிகரிக்கவும் கூடும். பின்வரும் வழிகளில் நீங்கள் யாருடன், என்ன பகிர்கிறீர்கள் என்பதைக் நிர்வகிக்கலாம்.

### உங்களுக்குத் தெரியுமா?

யார் உங்கள் Facebook செயல்பாட்டைப் பார்க்கலாம் என்பதை இயல்புநிலை அமைப்புகளைப் பயன்படுத்தி அல்லது தனித்தனி இடுகைகளுக்கான பார்வையாளர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.

## பார்வையாளரைத் தேர்ந்தெடுக்கலாம்

Facebook இல் தகவலைப் பகிரும் போது, அந்த உள்ளடக்கத்தைப் பார்க்கக்கூடிய பார்வையாளரைத் தேர்ந்தெடுக்கலாம். ஓர் இடுகையை எவ்வாறு பகிர விரும்புகிறீர்கள் என்பதன் மீதான அதிகப்படியான கட்டுப்பாட்டை உங்களுக்கு வழங்கும், பொது, நண்பர்கள், நான் மட்டும் அல்லது தனிப்பயன் போன்ற விருப்பங்கள் உங்களுக்கு உள்ளன. குறிப்பிட்ட நண்பர்களின் பட்டியல்களை உருவாக்குவதன் மூலம், ஏதேனும் இடுகை அல்லது படத்திற்கான பார்வையாளர்களை விரைவாக கட்டுப்படுத்தலாம். இந்தப் பார்வையாளர் தேர்வு விருப்பங்கள் தனிப்பட்ட இடுகைகள், பட ஆல்பங்கள், அறிமுகம் பிரிவின் கீழ் உள்ள உங்கள் அடிப்படை தகவல் ஆகியவற்றின் பகுதியாகக் காணப்படலாம், இருப்பினும் சில விஷயங்கள் எப்போதும் பொதுவிலேயே (எப்போதும் பொதுவில் இருப்பவை எவை என்பதைப் பற்றி அடுத்த பக்கத்தில் மேலும் அறிக) இருக்கும் என்பதை நினைவில்கொள்ளவும். உங்கள் Facebook சுயவிவரத்தின் வலதுகைப் பக்கத்தில் உள்ள தனியுரிமைக் குறுக்குவழிகள் ஐகானைக் கிளிக் செய்வதன் மூலம் பொது மற்றும் நண்பர்கள் எவ்வாறு பார்ப்பார்கள் என்பதை "இவராகக் காட்டு" என்ற அம்சத்தைப் பயன்படுத்திப் பார்க்கலாம்.

## புதிய நண்பர்களை ஏற்கும் போது, கவனத்துடன் இருக்கவும்

Facebook ஆனது நிஜ உலகில் இருப்பவர்களைக் குறிக்கும் அசல் பெயர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடையாளங்களையும் அடிப்படையாகக் கொண்டது. துரதிர்ஷ்டவசமாக, சில முறைகேட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் தகவலுக்கான அணுகலைப் பெற, புத்திசாலித்தனமான யுக்திகளைப் பயன்படுத்துகின்றனர். நீங்கள் ஏற்கனவே நண்பராக உள்ள ஒருவரிடமிருந்து புதிய நட்புக்கான அழைப்பைப் பெற்றால், அவர் புதிய சுயவிவரத்தை உருவாக்கியுள்ளாரா என்று அவரிடம் கேட்கவும். சில நேரங்களில், முறைகேட்டில் ஈடுபடும் தனிநபர்கள் அவர்கள் தொடர்புகொள்ள விரும்பும் நபரின் நண்பரைப் போன்ற திருட்டுத்தனமான கணக்குகளை உருவாக்குவார்கள்.

## குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கவும்

சில இளம்பருவத்தினர் அதிகப்படியான "நண்பர்கள்" கொண்டிருப்பதை கௌரவத்திற்கான மற்றும் பிரபலமானதற்கான அடையாளமாக நம்புகின்றனர். உங்கள் குழந்தைகளிடம் தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் தெரியாத நபர்களிடமிருந்து வரும் நட்புக்கான அழைப்புகளை ஏற்பதில் ஏன் தயக்கம் காட்ட வேண்டும் போன்றவற்றைப் பற்றி பேசவும்.

## தனியுரிமையை விவாதிக்கவும்

நண்பர்கள் உங்களைப் பற்றிய உள்ளடக்கத்தை இடுகையிடக்கூடும் அல்லது உங்களைக் அடையாளப்படுத்தக் கூடும் என்பதால் உங்கள் தனியுரிமையைப் பாதுகாப்பது என்பது உங்களை மட்டுமே சார்ந்தல்ல. அந்த விஷயங்கள் உங்கள் காலக்கோட்டில் (அடுத்த பக்கத்தில் பார்க்கலாம்) காட்டப்பட வேண்டுமா என்பதை நீங்கள் நிர்வகித்தாலும், நண்பர்களின் இடுகைகள் அல்லது படங்கள் ஆகியவை உங்கள் சொந்த அமைப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல் அவர்களின் காலக்கோட்டில் காட்டப்படும். முறைகேடு செய்தவரின் நண்பர்கள் முறைகேட்டால் பாதிக்கப்பட்டவரின் Facebook நண்பர்களாகவும் இருப்பதால் இது கவலைக்குரியதாக இருக்கும்.

- அடையாளப்படுத்தப்பட்டவர்கள் உள்ளடக்கத்தைப் பார்க்க அனுமதிக்கும் பெட்டியின் தேர்வை நீக்கவும். பார்வையாளர்கள் தேர்வியில் உள்ள தனிப்பயன் தனியுரிமை விருப்பத்தில் இதனைக் காணலாம்.
- எப்போது யாரால் அடையாளப்படுத்தப்பட்டீர்கள் என்பதை அறிய அடையாள மதிப்பாய்வுக் கருவியைப் பயன்படுத்தவும் ( இந்த அம்சத்தைப் பற்றி பக்கம் 4 இல் மேலும் அறியவும்).
- உங்கள் தனியுரிமை முன்னுரிமைகளைப் பற்றி நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பேசவும்.
- உங்கள் பணியிடம், நீங்கள் தன்னார்வலராகப் பணியாற்றும் இடங்கள் அல்லது நீங்கள் பங்குகொள்ளும் சமூகத்தில் உள்ள ஏஜென்சிகள் ஆகியோர் பணியாளர், தன்னார்வலர்கள் அல்லது நிகழ்வுகளைப் பற்றிய தகவல்களை இடுகையிடுவதாகக் கண்டறிந்தால், உங்கள் தகவல்களை தனிப்பட்டதாக வைக்கக் கேட்கவும்.

Facebook இல் நண்பர் பட்டியல்களைப் உருவாக்குவதைப் பற்றி மேலும் அறிய, இங்கு கிளிக் செய்யவும்:
https://www.facebook.com/help/listsbasics

# கட்டுப்பாட்டைத் திரும்பப்பெறுதல்: உங்கள் தனியுரிமை அமைப்புகளை மதிப்பாய்வு செய்தல்

## நீங்கள் பகிர்வதை யாரெல்லாம் பார்க்கலாம்?

யார் உங்கள் Facebook செயல்பாட்டைப் பார்க்கலாம் என்பதை "தனியுரிமை அமைப்புகள்"/ "யார் எனது விஷயத்தைப் பார்க்கலாம்" என்பதில் உள்ள இயல்புநிலை அமைப்புகளைப் பயன்படுத்தி அல்லது தனிப்பட்ட இடுகைகளுக்கான பார்வையாளர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கலாம். எந்த நேரத்திலும் இரண்டு இடங்களில் ஒரு இடத்தில் உங்கள் பார்வையாளர்களைத் தேர்ந்தெடுக்கலாம், மேலும் அது உங்கள் அடுத்த இடுகையில் இயல்புநிலையாக அமைக்கப்படும். வேறு விதமாகக் கூறுவதென்றால், நீங்கள் முதல்முறை "பொது" அல்லது "நண்பர்களுக்கு" என அமைத்தால், அதனை நீங்கள் மாற்றும் வரை அடுத்தடுத்த இடுகையின் பார்வையாளராக அதுவே அமைக்கப்படும். முந்தைய பக்கத்தில் விவரித்துள்ளது போல, பட்டியல்களைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட இடுகையை ஒரு நண்பர் பார்க்காமல் தடுக்கலாம், அல்லது குறிப்பிட்ட நண்பர்களுக்கு மட்டுமே இடுகையைக் காணும்படி அமைக்கலாம். முன்பு தனியுரிமை அமைப்புகளைப் பயன்படுத்தவில்லை என்றால், கடந்த இடுகைகளின் பார்வையாளர்களையும் கட்டுப்படுத்த முடியும். நீங்கள் உங்கள் சொந்த தகவல்களின் தனியுரிமையை மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்பதை நினைவில் கொள்ளவும், நீங்கள் வேறொருவரின் காலக்கோட்டில் ஏதாவது இடுகையிட்டால், அது அவர்களின் தனியுரிமை அமைப்புகளின்படியே செயல்படும்.

## யாரெல்லாம் உங்களைக் கண்டறியலாம்?

நீங்கள் Facebook இன் சேவை விதிமுறைகளைப் பின்பற்றி, உங்கள் சுயவிவரத்தில் உண்மையான பெயரைப் பயன்படுத்தி இருந்தால், யார் வேண்டுமானாலும் உங்களைப் பார்க்கலாம், உங்கள் பெயரைப் பயன்படுத்தி உங்கள் சுயவிவரத்தைக் காணலாம். நீங்கள் பயன்படுத்தும் தனியுரிமை அமைப்புகளைப் பொறுத்து அவர்கள் பார்க்கும் தகவல்களின் அளவு இருக்கும். உங்கள் மின்னஞ்சல் அல்லது ஃபோன் எண் மூலம் உங்கள் சுயவிவரத்தை யாரெல்லாம் தேடலாம் என்பதையும் கட்டுப்படுத்தலாம். இத்தகைய



விருப்பங்களை உங்கள் தனியுரிமை அமைப்புகள் பக்கம் அல்லது அறிமுகப் பக்கத்தில் (அமைப்பைப் பார்த்து திருத்த, அதன் மேலாக நகரவும்) நிர்வகிக்கலாம். அறிமுகம் பிரிவு உங்கள் மற்ற தனிப்பட்ட தகவல்களை யாரெல்லாம் பார்க்க முடியும் என்பதைக் கட்டுப்படுத்த உதவுகிறது. உங்கள் காலக்கோட்டை தேடு பொறிகள் நேரடியாகக் காட்டலாமா அல்லது வேண்டாமா என்பதையும் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். "அணை" என்பதாக இதனை அமைத்திருந்தால், Google அல்லது Bing போன்ற தேடு பொறிகள், அல்லது நண்பர்களைத் தேடும் தளங்கள் மூலம் உங்கள் பெயரைத் தேடும்போது, Facebook சுயவிவரம் காட்டப்படாது. யாராவது பாதிக்கப்பட்டவர்களைத் தேடும் போது அவர்களுக்குக் காட்டப்படும் தகவல்களைக் கட்டுப்படுத்த இந்த விருப்பம் முக்கியமானதாகும். எப்படி இருப்பினும், நீங்கள் "பொது" என இடுகையிட்ட உள்ளடக்கம், இன்னும் தேடு பொறிகளில் காட்டப்படும் என்பதை நினைவில் கொள்ளவும். இந்த அமைப்பை "அணை" என்பதாக அமைக்கும் போது, பார்வையாளர் தேர்வி மூலம் யாரெல்லாம் முந்தைய மற்றும் வருங்கால இடுகைகளைப் பார்க்கலாம் என்பதைத் தேர்ந்தடுக்கலாம். நீங்கள் பகிரும் விஷயங்கள் மற்றும் உங்கள் தனியுரிமை அமைப்புகளின் அடிப்படையில், உங்களின் நிகழ்காலத் தகவல்களைப் மற்றவர்கள் பார்க்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள், பாதுகாப்பாக இருக்க இருப்பிடத் தனியுரிமை மிக முக்கியமான ஒன்றாகும். Facebook செய்திகளை உங்கள் செல்போன் மூலம் அனுப்பும் போது, இருப்பிடப் பகிர்தல் அம்சத்தை அணைத்திருப்பதை உறுதிசெய்துகொள்ளவும், இல்லையெனில் உங்கள் செய்தியைப் பெறும் நபரால் உங்களின் அசலான, இருப்பிடத்தை வரைபடத்தின் மூலம் முழுமையாக அறிய முடியும்.

## அடையாளப்படுத்துவதில் இருந்து எப்படி கட்டுப்படுத்துவது?

அடையாளப்படுத்துதல் என்பது மற்றவர்களை உங்கள் காலக்கோட்டை கண்டறிய அனுமதிக்கும் Facebook இல் உள்ள மற்றொரு செயல்பாடாகும். உங்கள் தனியுரிமை அமைப்புகளைப் பயன்படுத்தி, உங்கள் காலக்கோட்டில் தோன்றும் முன் எல்லா அடையாளங்களையும் அனுமதி கேட்கத் தேர்ந்தெடுக்கலாம், நீங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடுகைகளின் பார்வையாளர்களைக் கட்டுப்படுத்தலாம், "அடையாளப் பரிந்துரை" அம்சத்தை அணைக்கலாம். உங்களைப் பற்றிய அடையாளப்படுத்தல்களை அகற்றலாம், எனினும் அடையாளத்தை அகற்றுவது அல்லது அடையாளத்தை அனுமதிக்காமல் இருப்பது, Facebook இலிருந்து இடுகை அல்லது படத்தை அகற்றாது. அந்த விருப்பங்கள் உங்கள் சொந்த காலக்கோட்டில் என்ன காட்டுப்படும் என்பதைக் கட்டுப்படுத்த மட்டுமே அனுமதிக்கின்றன. நீங்கள் உங்கள் தனியுரிமையைப் பற்றி கவலை கொண்டால், புகைப்படங்கள் அல்லது இடுகைகளை நீக்குமாறு தனிநபர்களிடம் கேட்க, Facebook இன் சமூகப் புகாரளிப்புக் கருவியைப் பயன்படுத்தலாம். உங்களுக்கு தீங்குவிளைவிக்கும் அல்லது Facebook இன் சமூகத் தரநிலைகளை மீறும் வகையில் ஏதாவது இடுகையிடப்பட்டிருந்தால், அதனைப் பற்றி Facebook இடம் புகரளிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மற்றும் துன்புறுத்தும் உள்ளடக்கத்தைப் பற்றி, சட்ட அமைப்புகளிடமும் புகாரளிக்கலாம்.

## உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்?

பிறரின் சொந்த காலக்கோட்டிலும் Facebook இன் மற்ற இடங்களிலும் மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைக் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், உங்கள் காலக்கோட்டில் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கட்டுப்படுத்தலாம். காலக்கோடு மற்றும் அடையாளப்படுத்துதல் என்பதன் கீழ், உங்கள் காலக்கோட்டில் யார் இடுகையிடலாம், யார் உங்கள் காலக்கோட்டைப் பார்க்கலாம் என்பதைக் கட்டுப்படுத்த முடியும்.

## இயல்புநிலையாக: எதுவெல்லாம் பொதுவில் இருக்கும்

உங்கள் தனியுரிமையை விரிவாக்க Facebook பல விருப்பங்களை உங்களுக்கு வழங்கினாலும், உங்கள் காலக்கோட்டை யாராவது பார்க்கும் போது சில தகவல் எப்போதும் கிடைக்கக்கூடும். உங்கள் பெயர், தற்போதைய சுயவிவரப் படம், தற்போதைய அட்டைப் படம், உங்கள் நெட்வொர்க்குகள், பாலினம் மற்றும் பயனர் ID ஆகியவை இந்தத் தகவலில் உள்ளடங்கும். பாதிப்பிலிருந்து மீண்டவர்கள் பகிர வேண்டிய தகவல் பற்றித் திட்டமிட விரும்பலாம், பொதுவான சுயவிவரம் அல்லது அட்டைப் படத்தைப் பயன்படுத்தலாம் அல்லது தனியுரிமையைப் பராமரிப்பதற்காக ஏதேனும் நெட்வொர்க்கில் இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கலாம்.

பொது இடுகைகளில் விருப்பம் தெரிவிப்பது அல்லது கருத்திடுவது: மற்றவர்களின் சுயவிவரம் அல்லது நிறுவனத்தின் பக்கங்களில் உள்ள இடுகைகள் அல்லது படங்களுக்கான தனியுரிமை அமைப்புகளின் கட்டுப்பாடு அவர்களுக்குரியது என்பதைக் கருத்தில் கொள்ளவும். இல்லையெனில், வேறு ஒருவர் பொதுவில் (யார் வேண்டுமானாலும் பார்க்கலாம்) அமைத்துள்ள படத்தின் மீது நீங்கள் விருப்பம் தெரிவித்தாலோ அல்லது கருத்து வழங்கினாலோ, உங்கள் கருத்தும் விருப்பமும் பொதுவில் காட்டப்படும்.

### தனியுரிமை அடிப்படைகள் கருவி

பயனர்கள் Facebook இல் தங்கள் தகவல் மற்றும் அனுபவத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்த உதவும்படி தனியுரிமை அடிப்படைகள் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் தனியுரிமையை எளிதாகக் கட்டுப்படுத்த, இதைப் பயன்படுத்தலாம்.

facebook.org/basics

# பாதுகாப்புக்கான இரண்டாவது அரண்: பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் அறிவிப்புகள்

உங்கள் கணக்கை யார் அணுகலாம் என்பதைப் பாதுகாப்பு அமைப்புகள் கட்டுப்படுத்தும். பாதிப்பிலிருந்து மீண்டவர்களுக்கு இது மிக முக்கியமானதாகும். முறைகேட்டில் ஈடுபடுபவர்கள், கடவுச்சொல்லைக் கணிப்பதன் மூலம் பாதிப்பிலிருந்து மீண்டவர்களின் கணக்கை அணுக முயற்சிக்கலாம். பாதுகாப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி, வேறு ஒருவர் உங்கள் கணக்கில் உள்நுழைய முடியாது என்பதை உறுதிசெய்துகொள்ளலாம். பாதிப்பிலிருந்து மீண்டவர்களுக்கான சில முக்கியமான அமைப்புகள் பின்வருமாறு:

பாதுகாப்பு சரிபார்ப்புக் கருவி

விருப்பங்களை விரைவாக மதிப்பாய்வு செய்யவும், உங்கள் கணக்கில் கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கவும் இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம். facebook.com/securitycheckup

## பாதுகாப்புக் கேள்விகள்

பெரும்பாலான பாதுகாப்புக் கேள்விகள் முறைகேட்டில் ஈடுபடுபவர் பதிலளிக்கக்கூடிய அல்லது பதிலைக் கணிக்கக்கூடிய வழக்கமான தனிநபர் சார்ந்த கேள்விகளாக இருக்கும். இந்தக் கேள்விகளுக்கு நேர்மையாக பதிலளிக்க வேண்டியது அவசியமில்லை. நீங்கள் மட்டும் நினைவுகூறக்கூடிய சொல் அல்லது சொற்றொடரைப் பயன்படுத்தி, உங்கள் பதில்களை உத்திப்பூர்வமாக அமைக்கலாம், எனவே, முறைகேட்டில் ஈடுபடுபவர்கள் பதிலைக் கணித்து உங்கள் கடவுச்சொல்லை மீட்டமைக்க முடியாது.

## உள்நுழைவு அறிவிப்புகள்

முன்னதாக நீங்கள் பயன்படுத்தாத கணினி அல்லது சாதனத்திலிருந்து உங்கள் கணக்கை யாராவது அணுக முயற்சித்தால், மின்னஞ்சல் அல்லது உரைச்செய்தி மூலமாக அறிவிப்புகளைப் பெறுவீர்கள்.

## உள்நுழைவு அனுமதிகள்

நீங்கள் வேறொரு இணைய உலாவி அல்லது சாதனத்திலிருந்து உங்கள் கணக்கில் உள்நுழைந்தால், உங்கள் கணக்கை அணுகுவதற்கு பாதுகாப்புக் குறியீடு வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட சாதனங்கள்

உங்கள் கணக்கை அணுக அனுமதிக்கப்பட்ட சாதனங்களை நிர்வகிக்கலாம், மேலும் அறியப்படாத சாதனத்திலிருந்து உங்கள் கணக்கை யாராவது அணுக முயற்சித்தால் அதுவும் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். கூட்டாளரின் சாதனத்திலிருந்து தனது கணக்கை அணுகியிருந்து, இனி அந்தச் சாதனத்திலிருந்து அணுக விரும்பாத பாதிக்கப்பட்டவருக்கு இது உதவிகரமாக இருக்கும்.

## இயக்கத்திலுள்ள அமர்வுகள்

இது முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியதாகும், ஏனெனில் இது தற்போது இயக்கத்திலுள்ள அல்லது உள்நுழைவில் உள்ள அமர்வுகளைக் காட்டும். உங்கள் கணக்கை அணுகியிருந்தால் அல்லது கணக்கைப் பயன்படுத்திய பயன்பாட்டிலிருந்து வெளியேற மறந்துவிட்டால், இயக்கத்திலுள்ள அமர்வுகளில் இருப்பீர்கள். வேறு யாராவது உங்கள் கணக்கை அணுகி இருந்தால், அதுவும் காட்டப்படும். இதுபோன்ற சமயத்தில், உங்கள் கணக்கை தொடர்ந்து அணுகுவதிலிருந்து சாதனத்தைத் தடுக்கும் 'செயல்பாட்டை முடி' எனும் விருப்பத்தைத் தேர்வுசெய்யலாம்.

## அறிவிப்புகள்

யாராவது ஒருவர் உங்களுக்கு நட்புக் கோரிக்கையை அனுப்புதல், உங்களை அடையாளப்படுத்துதல் அல்லது உங்கள் இடுகையில் யாராவது கருத்துக்களைத் தெரிவித்தல் போன்ற பலதரப்பட்ட செயல்பாடுகளை உங்களுக்குத் தெரிவிப்பதை Facebook அனுமதிக்கிறது. இந்த அறிவிப்புகளை ஒவ்வொன்றாகப் பார்த்து, எப்போது எந்த அறிவிப்பு வேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம். மின்னஞ்சல், Facebook இல் அல்லது உரைச்செய்தி அனுப்புதல் மூலமாக அறிவிப்புகளைப் பெற, தேர்வுசெய்யலாம்

## உங்கள் தகவலைப் பதிவிறக்கும் (DYI) கருவி

இந்தக் கருவியானது, உள்ளடக்கம் மற்றும் உங்கள் கணக்குடன் தொடர்புடைய பிறரின் இடுகைகள் மற்றும் படங்கள் போன்றவற்றையும் நீங்கள் கிளிக் செய்த விளம்பரங்கள் போன்ற உள்நுழைவு இல்லாமல் அணுகமுடியாத சில செயல்பாட்டையும் பதிவிறக்க உங்களை அனுமதிக்கும். முறைகேட்டில் ஈடுபடுபவர், துன்புறுத்துபவர் மற்றும் தேவையில்லாத தொடர்பு ஆகியவற்றுக்கான ஆதாரங்களைப் பாதிப்பிலிருந்து மீண்டவர் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஒரு சிறந்த வழியாக இந்தக் கருவி பயன்படுகிறது. இந்தக் கருவியைப் பயன்படுத்தி, உங்கள் காலக்கோட்டில் உள்ள இடுகைகள், நட்புக் கோரிக்கைகள், நீங்கள் நீக்கிய நண்பர்கள், அனுப்பிய மற்றும் பெற்ற செய்திகள் (நீங்கள் நீக்காத வரை), கணக்கை அணுகிய IP முகவரிகளின் வரலாறு போன்ற மேலும் பலவற்றைப் பதிவுசெய்யலாம். Facebook முழு வரலாற்றையும் தக்கவைத்துக் கொள்ளவில்லை என்றால், கணக்கை அணுகிய IP முகவரிகளின் முழு வரலாறும் இருக்காது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். இந்தத் தகவலைப் பதிவிறக்க, உங்கள் பொதுக் கணக்கு அமைப்புகளுக்குச் சென்று 'உங்கள் Facebook தரவின் நகலைப் பதிவிறக்கு' என்பதைக் கிளிக் செய்யவும். இந்தப் பதிவிறக்கத்தில் உங்கள் தனிப்பட்ட தகவல் அதிகமாக உள்ளது, எனவே இது முக்கியமானதாகும், யாரவது ஒருவர் இந்த மின்னஞ்சலை அணுக முடிந்தால், நீங்கள் சேமிக்கும் இடத்தைப் பாதுகாப்பாக வைக்கவும். தொந்தரவு அல்லது தேவையில்லாத தொடர்பை கணினியில் புகைப்படம் அல்லது ஸ்க்ரீன்ஷாட்டாக பதிவுசெய்யுமாறு பாதிப்பிலிருந்து மீண்டவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இடுகையில் உள்ள விருப்பங்கள் போன்ற சில உள்ளடக்கம் DYI இல் சேர்க்கப்படாது மேலும் பதிவிறக்கம் முடியும் முன்பே உள்ளடக்கம் முறைகேட்டில் ஈடுபட்டவரால் நீக்கப்படக்கூடும். எப்போதாவது தேவைப்படும் என்பதால், படங்கள் மூலம் இந்தத் தகவலைப் பாதுகாக்கவும். DYI கருவியைப் பற்றிய மேலும் தகவலுக்கு, இதைப் பார்க்கவும்: https://www.facebook.com/help/download.

# பாதுகாப்புக்கான மூன்றாவது அரண்:பாதுகாப்பாக இருத்தல்

பாதிக்கப்பட்டவர்களைத் தொந்தரவு செய்ய, முறைகேட்டில் ஈடுபடுபவர்கள், பின்தொடர்பவர்கள் மற்றும் மோசடியாளர்கள் பல்வேறு ஆன்லைன் இடங்களை முறைகேடாகப் பயன்படுத்துவார்கள். Facebook ஐ முறைகேடாகப் பயன்படுத்துதலில் உள்ளடங்குபவை: இடுகைகள் அல்லது தனிப்பட்ட செய்திகள் மூலம் அச்சுறுத்துவது அல்லது தொல்லைத் தருவது; தீங்கு விளைவிக்க அல்லது துயரப்படுத்த, நபரின் ஒப்புதல் இல்லாமல் படங்கள் அல்லது தகவலை இடுகையிடுவது; பாதிக்கப்பட்டவரின் கடவுச்சொல்லைப் பெற்று அவரது அனுமதியிலாமல் கணக்கை அணுகுவது; அல்லது ஆள்மாறாட்டம் செய்வது.

வன்கொடுமை செய்பவர்களின் இந்த உக்திகள் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றாலும், அவர்கள் Facebook சேவை விதிமுறைகளை மீறமாலும் இருக்கலாம், மேலும் தனிப்பட்ட முறையில், சட்டத்திற்குப் புறம்பாக இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். இதன் காரணமாக, Facebook மூலம் யாரவது பாதிப்பிலிருந்து மீண்டவர்களைத் தொந்தரவு செய்யும் போது அவர்களுக்குக் கிடைக்கும் விருப்பங்கள் மற்றும் வளங்களைப் பற்றி அறிய இது முக்கியமானதாகும்.

## Facebook இல் உள்ள கருவிகள்:

நட்பை விலக்குதல் அல்லது தடுத்தல் Facebook இல் தொந்தரவு செய்பவரை அடையாளம் காட்ட, பயனருக்கு இரண்டு விருப்பங்கள் உள்ளன.

- நட்பை விலக்குதல்: ஒருவரின் நட்பை விலக்கும் போது, “நண்பர்கள்” பார்வையாளர்களில் நீங்கள் அமைத்த செயல்பாடுகளை (படங்கள், புதுப்பிப்புகள், இடுகைகள்) அந்த நபர் இனிமேல் காணமாட்டார். கூடுதலாக, அவர்களின் செயல்பாடுகள் உங்கள் செய்தி வழங்கலில் காட்டப்படாது. எனினும், “பொது” பார்வையாளர்களுடன் நீங்கள் இடுகையிட்டது, உங்கள் காலக்கோட்டில் பரஸ்பர நண்பர்கள் வழங்கிய இடுகைகள் மற்றும் பரஸ்பர நண்பரின் காலக்கோட்டில் நீங்கள் வழங்கிய கருத்துக்கள் உட்பட உங்கள் சுயவிவரத்தில் பொதுவாக உள்ளவைகளை அவர்களால் இன்னும் காண முடியும். உங்களை நண்பராகச் சேர்க்க, அவர்கள் மீண்டும் கோரலாம்.
- தடுத்தல்: ஒருவரைத் தடுக்கும் போது, உங்கள் காலக்கோட்டுச் செயல்பாட்டைக் காண முடியாது, செய்தி அனுப்பவோ அல்லது அடையாளபடுத்தவோ அல்லது வேறொரு நட்புக் கோரிக்கையை உங்களுக்கு அனுப்பவோ முடியாது (தடுப்பது, அவரின் நட்பையும் தானாகவே விலக்கும்). நீங்கள் அவர்களின் செயல்பாடுகளையும் காண முடியாது. பயன்பாடுகளில் அல்லது குழுக்களில் உங்கள் பொது தகவல் மற்றும் செயல்பாடுகளை அவர்களால் இன்னும் காண முடியும்.

இந்த விருப்பங்களைப் பயன்படுத்துவதைத் தீர்மானிக்க, உங்கள் மதிப்பீடு மற்றும் இயல்புணர்வைப் பயன்படுத்தவும். பின்தொடர்பவர்கள் மற்றும் முறைகேட்டில் ஈடுபடுபவர்கள், பாதிக்கப்பட்டவர்களைத் தங்களது கட்டுப்பாட்டில் தக்கவைத்துக்கொள்ள உங்களைக் கண்காணிப்பார்கள் அல்லது அச்சுறுத்துவார்கள், அணுகலை பாதிப்பிலிருந்து மீண்டவர் வரம்பிடும்போது, சில நேரங்களில் முறைகேட்டில் ஈடுபடுபவர்கள் அச்சுறுத்தல்கள் மற்றும் சண்டையிடுவதை அதிகரிப்பது உட்பட சில பிற கட்டுப்பாட்டு முறைகள் அல்லது ஆபத்தான செயல்பாடுகளை ஈடுபடலாம். முறைகேட்டில் ஈடுபடுபவர்கள் உடனான உறவுமுறை அல்லது தொடர்பை முடித்துக்கொள்வது பாதிப்பிலிருந்து மீண்ட பலருக்கு ஆபத்தாகலாம். எனவே, இது பாதுகாப்புக்காக திட்டமிடுவதில் முக்கியமானதாகும் மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான அனுபவம் வாய்ந்த வழக்கறிஞரைத் தொடர்புகொள்ளவும். தொடர்பைத் துண்டிப்பதால் முறைகேட்டில் ஈடுபட்டவர் செய்யக்கூடிய செயலைப் பற்றிய அச்சம் இருந்தால், மேலும் தகவல் மற்றும் உதவிக்கு உங்கள் உள்ளூர் வன்முறை திட்டம் அல்லது காவல்துறையைத் தொடர்புகொள்ளவும்.

நெருங்கிய துணைவரின் வன்முறை, பின்தொடர்தல், மற்றும் முறைகேடு பற்றி மேலும் அறிய, பெண்கள் பாதுகாப்பு மற்றும்/அல்லது மனித உரிமைகள் சார்ந்த உங்கள் அருகில் உள்ள ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். www.nnedv.org இல் பார்வையிடலாம்.

இடுகையிடப்பட்டுள்ள உள்ளடக்கம் தீங்கு விளைவிக்கக்கூடியது அல்லது தளத்தை ஒருவர் தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்துகிறார் எனில் அதனைப் பற்றி Facebook இடம் ஒரு நபர், இடுகை அல்லது படத்தைப் புகாரளிக்கலாம். இதை உங்கள் காலக்கோட்டிலிருந்து, யாரோ ஒருவர் உங்களுக்கு அனுப்பிய செய்தியிலிருந்து அல்லது உங்கள் செய்தி வழங்கலிலிருந்து செய்யலாம்.

உங்கள் காலக்கோட்டில் உள்ள இடுகைகள், நீங்கள் அடையாளப்படுத்தப்பட்ட இடுகைகள் அல்லது தனிப்பட்ட செய்திகளைப் பற்றி புகாரளிக்கலாம். உங்களை அடையாளப்படுத்தியுள்ள அல்லது அடையாளப்படுத்தாத படத்தைப் பற்றியும் புகாரளிக்கலாம். சில வகை உள்ளடக்கத்தைப் புகாரளிப்பது பற்றிய விரைவான வழிமுறைகளுக்கு, இதைப் பார்க்கவும்: www.facebook.com/report.

எதையாவது பற்றி Facebook இல் புகாரளிப்பதைப் பற்றிய பொதுவான கூடுதல் தகவலுக்கு, இதைப் பார்க்கவும்: https://www.facebook.com/help/reportviolation.

இந்தப் புகாரளிக்கும் விருப்பத்தைப் பயன்படுத்தும் போது, இடுகையிட்டவரிடம் அந்த உள்ளடக்கத்தை அகற்ற அல்லது மாற்ற அவர்களிடம் கேட்பதற்கான தேர்வும் உள்ளது, மேலும் இந்த உள்ளடக்கத்தைப் பற்றி மற்றொரு நம்பிக்கையான நபரிடம் தெரிவிக்கலாம்.

உள்ளடக்கம் Facebook இன் சேவை விதிமுறைகளை மீறினால், அகற்றப்படலாம். Facebook சமூக தரநிலைகளைக் கொண்டுள்ளது மேலும் உள்ளடக்கத்தில் வன்முறை அல்லது அச்சுறுத்தல், வன்கொடுமை அல்லது துன்புறுத்துதல், வெறுக்கத்தக்க உரை, பாலியல் வன்முறை மற்றும் வெளிப்படையான பாலியல் உள்ளடக்கம் அல்லது ஆள்மாறாட்டம் ஆகியவை இருந்தால் உள்ளடக்கம் அகற்றப்படும். இந்த இணைப்பைப் பார்க்கவும்: Facebook இன் சமூக தரநிலைகளின் முழு பட்டியல் மற்றும் துன்புறுத்தல், அச்சுறுத்தல்களை அவர்கள் எப்படி வரையறுக்கிறார்கள் என்பது பற்றிய மேலும் தகவலுக்கு https://www.facebook.com/communitystandards ஐப் பார்க்கவும்.

குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான ஒன்று துன்புறுத்தல், அச்சுறுத்தல் அல்லது Facebook இல் உள்ள மற்ற நடத்தைகள் பற்றிய ஆதாரங்களை பாதிப்பிலிருந்து மீண்டவர் பாதுகாப்பாக வைக்க விரும்பினால், இந்தப் புகார் கோரிக்கையை சமர்பிப்பதற்கு முன்பு, அவற்றை அகற்றுவதற்காக செயல்பாட்டை ஸ்கிரீன்ஷாட் எடுக்க வேண்டும் அல்லது DYI கருவியைப் பயன்படுத்தி சேமிக்க வேண்டும். அகற்றப்பட்டவுடன், உள்ளடக்கத்தை மீண்டும் அணுக முடியாது.

Facebook இல் முறைகேட்டில் ஈடுபடுபவர்களை வெளிப்படுத்துவது பற்றி மேலும் தகவலுக்கு, Facebook இன் உதவி மையத்தில் உள்ள பின்வரும் இணைப்புகளைப் பார்க்கவும்:

முறைகேட்டில் ஈடுபடுபவர்களை வெளிப்படுத்துவதற்கான கருவிகள்: https://www.facebook.com/help/addressingabuse

பெற்றோர்கள் மற்றும் பயிற்றுனர்களுக்கான கருவிகள்: https://www.facebook.com/help/parents&educators

# Facebook அல்லாத பிற இடங்கள்:

சில உள்ளடக்கங்கள் அல்லது இடுகைகள் உங்களை அச்சுறுத்துவதாக அல்லது தொந்தரவு செய்வதாக நினைத்தாலும், அவை Facebook இன் சேவை விதிமுறைகளை மீறாமல் இருக்கலாம், அதனால் அவற்றை அகற்ற முடியாது.

சட்ட வழிமுறைகள்

யாராவது உங்களைத் தொந்தரவு செய்தால், அச்சுறுத்தல் ஏற்படுத்தினால் அல்லது பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை உருவாக்கினால், உள்நாட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விருப்பங்களைப் பற்றி அறிய வழக்கறிஞர் அல்லது சட்ட அமலாக்கப் பிரிவைத் தொடர்புகொள்ளலாம். உங்களை எப்படி பாதுகாப்பது மற்றும் ஆன்லைன் தொந்தரவுகளை ஆவணப்படுத்துவது, கிடைக்கும் சட்ட வழிமுறைகள், தொந்தரவுகள் அல்லது அச்சுறுத்தல்கள் அதிகமானால் உங்கள் பாதுகாப்பை உறுதிசெய்வது பற்றிய திட்டங்களை உங்களுக்கு அவர்கள் எடுத்துக்கூறுவார்கள். Facebook இல் முறைகேட்டில் ஈடுபடுபவரின் செயல்பாடுகள் Facebook இன் சேவை விதிகளை மீறாமல் அல்லது சட்டத்தை மீறாமல் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக (உதாரணமாக தெளிவற்ற தொடர் தொந்தரவு செய்திகள்) பயமுறுத்துவதாக அல்லது துன்புறுத்தவதாக எடுத்துக்கொள்ளப்படும்.

உங்களிடம் பாதுகாப்புக்கான ஆர்டர் அல்லது பிறருக்கு எதிராக கட்டுப்படுத்தும் ஆர்டர் இருந்தால் அல்லது அதைக் கோரினால், ஆர்டரைக் கோருவதில், ஆன்லைன் அல்லது தகவலை இடுகையிடுவது அல்லது ஆன்லைனில் உள்ள உங்களின் படங்கள் மூலமாக நபர் உங்களைத் தொடர்புகொள்வதில் இருந்து தடுக்கும் மொழியும் உள்ளடங்கியுள்ளது. பல மாநிலங்கள் ஏற்கனவே டெம்ப்ளேட் பாதுகாப்பு ஆர்டர் படிவங்களைக் கொண்டுள்ளன. ஏற்கனவே உள்ள ஆர்டர்கள் இந்த மொழிக்கும் பொருந்தலாம்.

விசாரணையில் தேவைப்படும் தகவலுக்கு அவர்களை சட்ட அமலாக்கப் பிரிவினர் தொடர்புகொள்ளும் விதம் பற்றிய வழிகாட்டல்கள் Facebook இல் உள்ளது. உங்களுடன் பணிபுரியும் அதிகாரிகளுடன் பின்வரும் இணைப்பைப் பகிரலாம்: https://www.facebook.com/safety/groups/law/guidelines/.



## மேலும் தகவலுக்கு:

Facebook இல் உங்கள் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு விருப்பங்கள் பற்றி மேலும் அறிய, பின்வரும் இணைப்புகளைப் பார்வையிடவும்:

Facebook இன் தனியுரிமைப் பக்கம்:
www.facebook.com/privacy

குடும்பப் பாதுகாப்பு மையம்:
www.facebook.com/safety

அடிப்படை பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் கருவிகள்:
www.facebook.com/help/privacybasics

பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் மற்றும் கருவிகள்:
www.facebook.com/help/securitytips

NNEDV இன் இணைய பாதுகாப்புத் திட்டங்கள்:
www.nnedv.org/safetynet

ஆன்லைன் பாதுகாப்பில் பாதுகாப்பான இணைய வளங்கள்:
www.techsafety.org/resources

பாதுகாப்பு இணையத்தின் தொழில்நுட்பப் பாதுகாப்பு ஆவணங்கள்:
www.nnedv.org/safetynetdocs

NNEDV

facebook



©2015